31 மார்ச் 2022 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான இணக்கத் தணிக்கை (வருவாய்) குறித்த இந்திய தணிக்கைத் தலைவரின் தணிக்கை அறிக்கை 29-06-2024 அன்று மாநில சட்டப் பேரவையில் ஒப்படைக்கப்பட்டது.

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட முக்கிய தணிக்கை கண்டுபிடிப்புகள் பின்வருமாறு.

இந்த அறிக்கையில், சரக்கு மற்றும் சேவைகள் வரி தலைப்பின் கீழ் பொருள் குறித்த இணக்கத் தணிக்கை, "டாஸ்மாக்கின் செயல்பாடு" என்ற தலைப்பில் இணக்கத் தணிக்கை மற்றும் முத்திரைத்தீர்வை மற்றும் பதிவின் கீழ் வரைவுத் தனிப்பத்திகள் உட்பட, ₹2,978.46 கோடி மதிப்புடைய 11 பத்திகள் இடம் பெற்றுள்ளன.

## I பொது

மாநிலத்தின் மொத்த வருவாய் வரவு 2021–22–ஆம் ஆண்டில் ₹ 1,34,982.81 கோடி ஆக இருந்தது. இதில் ₹ 1,22,866.29 கோடி வரி வருவாயும், ₹ 12,116.52 கோடி வரியல்லாத வருவாயும் அடங்கும். மத்திய அரசிடமிருந்து ₹ 37,458.62 கோடி மாநிலத்தின் மத்திய வரிப் பங்காகவும், ₹ 35,050.98 கோடி மானியமாகவும் பெறப்பட்டன. 2021–22–ல் மாநில அரசு வசூலித்த தொகை மொத்த வரித் தொகையில் 65 விழுக்காடாக இருந்தது. இது 2020–21–ல் 67 விழுக்காடாக இருந்தது. விற்பனை மற்றும் தரகு மற்றும் சரக்கு மற்றும் சேவைகள் வரி மூலம் வசூலிக்கப்பட்ட தொகை (₹93,944.70 கோடி) மாநிலத்தின் மொத்த வருவாயில் குறிப்பிடத்தக்க பகுதியாக (76 விழுக்காடு) இருந்தது.

**(பத்தி 1.1)**

சரக்கு மற்றும் சேவைகள் வரி, வாகன வரி, முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம், மாநில ஆயத்தீர்வை, சுரங்கம் மற்றும் கனிமங்கள் மற்றும் நில வருவாய் தொடர்புடைய பதிவுருக்களை 2021–22–ல் தணிக்கை மேற்கொண்டதில், ₹149.08 கோடி மதிப்புள்ள குறைவு மதிப்பு, குறைவு வசூல், வருவாய் இழப்பு மற்றும் இதர இனங்களில் குறிப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. இவை ஆய்வு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**(பத்தி 1.9)**

## II சரக்கு மற்றும் சேவைகள் வரி

"ஜிஎஸ்டி வரி வசூல் மற்றும் வரித் தாக்கீடு மீது துறையின் ஆளுமை" தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட பொருள் குறித்த இணக்கத் தணிக்கையில் கீழ்க்காணும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன:

- வட்டத் தணிக்கை, மையத்தணிக்கை மற்றும் விரிவான தணிக்கை ஆகிய மூன்று பகுதிகளாக தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. வட்டத் தணிக்கையில் 10 வரி வட்டங்களில் தணிக்கை நடைபெற்றது. மையத் தணிக்கையில் 436 வரி செலுத்துவோரின் தரவுகளில் மீறல்கள் மற்றும் சீரற்றமைகள் குறித்து சோதனை நடந்தது. 100 வரி செலுத்துவோரின் வரித் தாக்கல்கள் மற்றும் தொடர்புடைய பதிவுருக்கள் விரிவான தணிக்கையில் தவறான உள்ளீட்டு வரி வரவு மற்றும் வரி செலுத்தாமை/ குறைவு வரி பற்றி தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(பத்தி 2.4.4)

- வரித் தாக்கீடு செய்யாதோர் மீது தகுந்த அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது வட்டத் தணிக்கையில் தெரிய வந்தது. தணிக்கை காலத்தில் வரித்தாக்கல்கள் ஆய்வுக்குட்படுத்தப்படவில்லை என்பதும் நிலையான செயல்பாட்டு விதிமுறைகள் பின்பற்றப்படவில்லை என்பதும் அறியப் பெற்றது. ரத்து செய்யப்பட்ட வரி செலுத்துவோர் ஜிஎஸ்டிஆர்–10 தாக்கீடு செய்யவில்லை. ஆனாலும் இவர்கள் புதிய பதிவை பெற முடிந்தது.

(பத்தி 2.4.6)

- தரவிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 14 அளவுருக்கள் அடிப்படையில் மையத் தணிக்கை நடைபெற்றது. 143 இனங்களில், தவறான தரவு பதிவு காரணமாக தாக்கல்களில் தவறான தகவல்கள் காணப்பட்டன. 111 இனங்களில், ₹ 992.38 கோடி அளவில் தவறுகள் தணிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளன. துறை ₹5.46 கோடி வசூலித்தது. 103 இனங்களில் தாக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

(பத்தி 2.4.7)

- விரிவான தணிக்கையின் போது, அதிக உள்ளீட்டு வரி கோரிக்கை, உள்ளீட்டு வரி கோரிக்கை தடை செய்யப்பட்ட பரிமாற்றங்களில் கோரிக்கை மற்றும் இறக்குமதியின் மீது தவறான உள்ளீட்டு வரி கோரிக்கை ஆகியன அறியப்பட்டன. இவ்வாறான அதிக கோரிக்கையின் மதிப்பு ₹ 31.08 கோடி ஆகும்.

(பத்தி 2.4.8.2 A)

- 56 இனங்களில் ₹ 22.68 கோடி வரி செலுத்தப்படாததும் விரிவான தணிக்கையில் கண்டுபிடிக்கப்பட்டது.

(பத்தி 2.4.8.2 B)

## III மாநில ஆயத் தீர்வை

- 43 டிப்போக்களில் பதிவுருக்களை ஆராய்ந்த போது, ஆயத் தீர்வை உயர்த்தப்பட்டதன் விளைவாக செலுத்த வேண்டிய வித்தியாச முத்திரைத் தீர்வையான ₹30.50 கோடியை டாஸ்மாக் செலுத்தவில்லை என்றறியப்பட்டது. ஆனால், அதிக பட்ச விலையை டாஸ்மாக் உயர்த்தியது. இந்த குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டு, டாஸ்மாக்கிற்கு எதிராக கேட்பு எழுப்பப்பட்டுள்ளது.

**(பத்தி 3.3.8.1)**

- வரைவு திட்ட அறிக்கையை சமர்ப்பித்த பின் திட்ட தேவைகளை மாற்ற முயற்சித்ததால், ஆரம்ப–இறுதி மென்பொருள்மயமாக்கல் மேலும் தாமதத்திற்குட்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

**(பத்தி 3.3.8.3 (i))**

- கிடங்கு கண்காணிப்பு திட்டத்தில் உற்பத்தி தேதி மற்றும் தொகுப்பு எண்களைப் பதிவு செய்ய வசதி இல்லை. இதனால், முதல்–வருகை–முதலில்–வெளியேறும் முறையை டாஸ்மாக் உறுதி செய்ய இயலவில்லை.

**(பத்தி 3.3.8.3 (ii))**

- மதுபானங்களை கொண்டு செல்ல தெரிந்தெடுக்கப்பட்ட போக்குவரத்து ஏலதாரர்களிடம் ஜிஎஸ்டின், மோட்டார் வண்டி காப்பீடு போன்ற ஏலத்தில் பங்கு பெறுவதற்கான அடிப்படை ஆவணங்கள் இல்லை. அதே ஆட்கள் மீண்டும் மீண்டும் ஏலத்தில் தெரிவு பெற்றதால், ஏல விண்ணப்பங்கள் 'கார்டல்' முறையில் நடக்கின்றதோ என்ற வினா எழுகிறது.

**(பத்தி 3.3.8.4)**

- சில்லறைக் கடைகளில் நிறுவப்பட்டுள்ள 5,359 பிஓஎஸ் கருவிகளில் 3,114 மட்டுமே செயல்படுகின்றன. அதிக விலைக்கு விற்பதாக புகார்கள் வந்த வண்ணம் இருந்த போதிலும், தரகு பெரும்பாலும் பணப் பரிமாற்றத்தின் மூலமே நடைபெறுகிறது.

**(பத்தி 3.3.8.5 (ii))**

## IV முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம்

- பட்டய இயந்திரவியல் பொறியாளர் ஒரு கட்டிடத்தின் பாகங்களை மதிப்பிடுகையில், அப்பாகங்கள் பத்திரப் பதிவிற்கு பின்பே பொருத்தப்பட்டதாக குறித்திருந்தார். ஆனால், அவரது அறிக்கையில் இப்பாகங்கள் பத்திரம் பதிவுக்கு வருமுன்னரே பொருத்தப்பட்டுள்ளதை பதிவு செய்திருந்தார். பதிவு அலுவலர் அறிக்கையை கூர்ந்து கவனிக்காததன் விளைவாக ₹21.67 இலட்சம் முத்திரைத் தீர்வை இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.4.1)**

- விக்கிரைய ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட விற்பனைத் தொகை இறுதி விற்பனையில் இடம் பெறவில்லை. இதனால், ரூபாய் ஒரு கோடி முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.4.2)**

- தலைமைக் கட்டுப்பாட்டு வருவாய் அதிகாரியின் வழிகாட்டுதல் ஆணை இருந்தும், அதனை பின்பற்றாமல் ஒரு குடும்பத்திற்குள் இல்லாத செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு அலுவலர் தவறாக வகைப் படுத்தியதால் ₹30.23 இலட்சம் முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.4.3)**

- பொது நிலப் பகுதியை விக்கிரையத்திற்குட்பட்ட மொத்த பரப்பில் சேர்க்காமையால் ₹45.23 இலட்சம் முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.4.4)**

- விற்பனை ஒப்பந்த ஆவணத்தில் முன் தொகை குறைவாக தெரிவித்ததால் ₹54.20 இலட்சம் பதிவுக் கட்டணம் இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.4.5)**

- துணை பதிவுத்துறைத் தலைவர், மூன்று சொத்துக்களுக்கு அளித்த உயர் வழிகாட்டி மதிப்புகள் துறையின் இணைய தளத்தில் பதிவேற்றப்படவில்லை. பதிவு அலுவலர், திருத்திய ஆணைகளை கவனிக்காமல், இணைய தளத்திலுள்ள மதிப்பினையே எடுத்துக் கொண்டதால் ₹2.68 கோடி முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.4.6)**

- ஒரு இனத்தில், குத்தகை காலம் தவறாக கணிக்கப்பட்டதால் ₹22.65 இலட்சம் பதிவுக் கட்டணம் இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.4.7)**

- ஒரு இனத்தில், பதிவு அலுவலர், குடும்பமல்லாத விடுதலைப் பத்திரத்தை, 47A (1)–ன் கீழ் அனுப்பக்கூடிய பத்திரமல்லாத போதிலும், டி.ஆர்.ஓ–வுக்கு மதிப்பீட்டிற்கு அனுப்பினார். டி.ஆர்.ஓ இதனை வழிகாட்டி மதிப்புக்குக் குறைவாக மதிப்பிட்டதால் ₹3.44 கோடி முத்திரைத்தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் இழப்பு ஏற்பட்டது.

**(பத்தி 4.4.9)**